(2023-24-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2)

SUBJECT CODE 23 UTM 1A1

REG.NO

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) : : பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : நவம்பர் – 2023**

**பி.ஏ. தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 75**

**முதல் பருவம்** **நேரம் : 3 மணி**

## பகுதி – 3

## தமிழக வரலாறும் பண்பாடும்

**பகுதி – அ** **(10x1=10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **(K1)**

1. அரிக்கமேட்டு அகழ்வாராச்சியில் கிடைத்த ரோமாபுரி நாணயங்களின் காலம்
   (அ) கி.மு. 3 (ஆ) கி.பி. 5 (இ) கி.பி. 3 (ஈ) கி.பி. 1, 2
2. பாண்டிய நாட்டு முத்துக்களைப் பாராட்டிய வெளிநாட்டுப் பயணி
   (அ) மெகஸ்தனிஸ் (ஆ) பிளினி (இ) யுவான் சுவாங் (ஈ) பெரிப்ளூஸ்
3. அரசனுடைய அவையில் பெருங்கணிகள் இருந்ததைக் கூறும் நூல்
   (அ) பட்டினப்பாலை (ஆ) சிலப்பதிகாரம் (இ) மணிமேகலை (ஈ) புறநானூறு
4. ‘வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்” எனக் கபிலரைப் பாராட்டிய சங்கப் புலவர்
   (அ) பரணர் (ஆ) பொருந்தல் இளங்கீரனார் (இ) தும்பிசேர் கீரனார் (ஈ) மாமூலனார்
5. வாய்மொழிப் பாடல்களில் முதலிடம் வகிப்பவை
   (அ) கும்மிப் பாடல்கள் (ஆ) தொழிற்பாடல்கள்
   (இ) ஒப்பாரிப் பாடல்கள் (ஈ) தாலாட்டுப் பாடல்கள்

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.** (K2)

6. தமிழக வரலாற்றில் ‘இருண்ட காலம்” என அழைக்கப்படும் காலம் எது?
7. களவு என்றால் என்ன?
8. ஊசலாட்டம் – விளக்குக.
9. வெள்ளிமீன் குறித்துச் சங்கத் தமிழர் கொண்டிருந்த நம்பிக்கை யாது?
10. கணிகையர் என்பார் யார் என்பதனைக் கூறுக.

**பகுதி – ஆ** (5 x 5 = 25)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.** (K3)

11. அ. படை வீடு குறித்து எழுதுக.

**(அல்லது)**

ஆ. தமிழக வரலாற்றை அறிய உதவும் அடிப்படை ஆதாரங்கள் குறித்துக் கூறுக.

**(த.பி.பா.)**

*ETHICAL PAPER*

12. அ. அடியார்க்கு நல்லார் உரை வழி அறியலாகும் உடைகளைக் குறிப்பிடுக.

**(அல்லது)**

ஆ. புகார் நகரத் துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களைக் குறிப்பிடுக.

13. அ. பண்டைத் தமிழர் கல்வியில் எவ்வெவற்றைக் கற்பித்தனர் என்பதைக் குறிப்பிடுக. **(அல்லது)**

ஆ. ஓரையாடுதல் விளையாட்டைப் பற்றிக் கூறுக.

14. அ. கபிலரைச் சங்கப் புலவர்கள் பாராட்டும் பாங்கினைப் பற்றி எழுதுக.

**(அல்லது)**

ஆ. பண்டைத் தமிழர் நம்பிக்கையில் காக்கையும் குயிலும் பெறுமிடம் பற்றிக் கருத்துரைக்க.

15. அ. இந்திய நாகரிகத்தில் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள் பெறுமிடம் பற்றிக் கூறுக.

**(அல்லது)**

ஆ. வாய்மொழிப் பாடல்களில் ஒப்பாரிப் பாடல்கள் பெறும் முதன்மையைக் குறிப்பிடுக.

பகுதி – இ (5 x 8 = 40)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு மட்டும் விரிவாக விடையளிக்கவும்.** (K4 & K5)

16. அ. தமிழக வரலாற்றுக்கான அடிப்படை ஆதாரங்களில் கல்வெட்டுகளும், செப்பேடுகளும் பெறுமிடம் குறித்து விவரிக்க.

**(அல்லது)**

ஆ. சங்க காலத் தொழிற் பிரிவுகள் குறித்து விவரித்து எழுதுக.

17. அ. பண்டைத் தமிழர் குடும்ப வாழ்வில் விருந்தோம்பல் இடம்பெறும் பாங்கினை விவரித்து எழுதுக. **(அல்லது)**

ஆ. பண்டைத் தமிழரின் உறையுள் பற்றி விவரித்துரைக்க.

18. அ. பண்டைத் தமிழரின் விளையாட்டுகள் பற்றி விவரிக்க.

**(அல்லது)**

ஆ. சங்க கால விழாக்கள் பற்றி விளக்கி வரைக.

19. அ. சங்கப் புலவர் பண்பாடு குறித்து விரித்துரைக்க.

**(அல்லது)**

ஆ. தமிழர் தம் வாழ்வில் கண்ட நல்லறங்களைப் பற்றி விளக்குக.

20. அ. சங்க கால மகளிர் நிலை பற்றி விவரிக்க.

**(அல்லது)**

ஆ. வாய்மொழி இலக்கியங்கள் தமிழ்ப் பண்பாட்டைப் புலப்படுத்தும் பாங்கினை விளக்கி எழுதுக.